# கல்விவளங்கள் செயற்றிட்டம் ஆண்டறிக்கை
**2026**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | கல்விவளங்கள் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0009 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 மாசி |
| அறிக்கையிடல் காலம் | தை 2025 - மார்கழி 2025 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | FACE |
| முக்கிய பங்குத்தாரர்கள் | அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| அறிக்கையிடல் காலத்திற்குரிய செயற்றிட்டச் செலவு | 604,536 ரூபா |

செயற்றிட்ட அறிமுகம்

2020 திறந்த கல்வி வளங்கள் செயற்திட்டமானது, இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் கல்வி சார் முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும் வண்ணம் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்றிட்டமாகும். பாடசாலைகளிலே மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளுடன் தொடர்பான ஆவணங்களைச் சேகரித்து, ஆவணப்படுத்தி அவற்றை இணையத் தளம் வழியாக பாடசாலை சமூகம் மற்றும் அனைவருக்கும் பயன்தரும் வகையில் வெளியிடுதலே இச்செயற்றிட்டப்பணியாக அமைகிறது.

இலக்கு

பாடசாலைகள் மற்றும் கற்றல் நிலையங்களுடன் வலையமைப்பினை உருவாக்கி கல்வியுடன் தொடர்புடைய அனைத்து வளங்களையும் திரட்டி கற்றல் சமூகத்திற்குரிய வகையில் நூலக விஞ்ஞான வகைப்படுத்தல்களுக்கமைய திறந்த அணுக்கத்தில் வழங்குதல்.

நோக்கம்

- பாடசாலைக் கல்வியுடன் தொடர்பான வளங்கள் கிடைக்கப்பெறும் தளங்களை அறிந்து அங்கு காணப்படும் ஆவணங்களை, அனுமதி பெற்று, நூலகச் சீர்தரங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி விபரித்து ஒரு தளத்துக்குக் கொண்டு வந்து, வகுப்பு ரீதியாகவும், பாட ரீதியாகவும் பகுத்து மாணவர்களின் பாவனைக்காக விடுதல்
- பாடசாலை மற்றும் கல்வி நிலையங்களுக்கிடையிலான வலையமைப்பினை கட்டியெழுப்புதல்.

- செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வை கற்றல் சமூகத்தினரிடையே ஏற்படுத்தல்.

அடைவுகள்

- 2020 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை இச்செயற்றிட்டத்தின் கீழ் 24,289 கல்வி சார் ஆவணங்கள் மின்வருடப்பட்டும் மென்கோப்பு வடிவிலும் இச்செயற்றிட்ட முகப்பில் அனைவருக்குமான இலவச அணுக்கத்தில் கிடைக்கும் வகையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**2025** ஆம் ஆண்டிற்கான அடைவுகள்

**2025** ஆம் ஆண்டின் செயற்றிட்ட விழிப்புணர்வு நிகழ்வுகள்

- 2025 ஆம் ஆண்டுக்கான YGC புத்தாக்கத் திருவிழா முதல்நாளில், “நூலக நிறுவனம்” நிகழ்வின் போது கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் திறந்த கல்வி வளங்கள் செயற்றிட்டம் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.




- 11.09.2025 அன்று யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவர்களுக்கான "திறந்த கல்வி வளங்கள் செயற்றிட்டம்" தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.




**2025** ஆம் ஆண்டின் திறந்த கல்வி வளங்கள் செயற்றிட்டத்துடனான கூட்டு கல்வி நிறுவனங்கள்

- வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்
- வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்
- நெல்லியடி மத்திய கல்லூரி
- வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி
- அருணோதயக் கல்லூரி
- வடக்கு மத்திய கல்லூரி

எதிர்கொண்ட சவால்கள்

- Noolaham.school வலைத்தளத்தில் இணைக்கப்படும் ஆவணங்களை நேரடியாக பார்வையிடமுடியாத நிலை காணப்பட்டது.
- பாடசாலைகளில் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் அனுமதி பெறுவதில் சிக்கல்கள் மற்றும் கால தாமதம் காணப்பட்டமை.
- பாடசாலைகளில் வினாத்தாள்களை சரியான ஒழுங்குமுறையில் பேணப்படாமையினால் வினாத்தள்களினை பெறுவதில் சிக்கல் காணப்படுதல்.
- யாழ்ப்பாணம் மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் அனுமதி மற்றும் வினாத்தாள்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்படுகின்றமை

கற்றல்களும் பரிந்துரைகளும்

- நூலகம் மற்றும் பாடசாலைகள் , வலயக் கல்வி அலுவலகங்களுக்கிடையில் சந்திப்புகளை உருவாக்குவதல்.
- பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இடமாற்றம் செய்யப்படும் செயற்றிட்டத்திற்குரிய பணியாளர்கள் அடுத்ததாக வரும் பணியாளர்களிடம் செயற்றிட்டம் பற்றிய அறிமுகத்தினை வழங்கிச்செல்லல்.
- தன்னார்வலர்கள் மூலம் ஏனைய பிராந்தியங்களில் காணப்படும் விடயங்களையும் உள்ளெடுத்தல்.

முடிவுரை

இச்செயற்றிட்டம், திறந்த கல்வி வளங்களை உருவாக்கி பகிரும் ஒரு முக்கியமான சமூக அறிவு தளமாக வளர்ந்து வருகிறது.

FACE நிறுவனத்தின் நிதி ஆதரவுடன், 2020 முதல் தொடர்ச்சியாக செயல்பட்டு வரும் இந்தத் திட்டம்:

- ஆயிரக்கணக்கான கல்வி வளங்களை பாதுகாத்து
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான திறந்த கற்றல் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது

**24,289** ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளமை, இந்தத் திட்டத்தின் செயல்திறனையும் அதன் சமூகத் தேவையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

எதிர்காலத்தில், இந்த முயற்சி இலங்கை முழுவதும் பரவலாக விரிவடைந்து, திறந்த கல்விக்கான முக்கிய தளமாக உருவெடுக்கக்கூடிய திறன் கொண்டுள்ளது.

பின்னிணைப்பு
திறந்த கல்வி வளங்கள்